அந்த இடத்தில் * * * *

* * * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் இவ்வாறு குற்றச்சாட்டுகள் சொல்லக்கூடாது. ஆகவே, இதை அவைக் குறிப்பிலே இருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவரவர்களே, அந்த இடத்தை மாநில டூரிஸ்ட் சென்டராக ஆக்குவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, அதை மாநில அளவிலே உள்ள ஒரு சுற்றுலா தலமாக ஆக்க வேண்டும் என்பதுதான் அரசின் விருப்பம். ஆனால் பொருளாதார சூழ்நிலையை மனதிலே கொண்டு அது மாவட்ட சுற்றுலாத் தலமாக உருவாக்கப்பட்டிருக்கின்றது. அதற்குப் பிறகு அதை மாநில சுற்றுலாத்தலமாக ஆக்குவதற்கு இன்னும் சொல்லப் போனால் குற்றாலத்திற்குப் போகிற வழியிலே அது இருப்பதால் அதை இந்திய சுற்றுலாத்தலமாகக் கூட ஆக்குவதற்குரிய வாய்ப்பு இருக்கின்றது. ஆகவே, அதைப்பற்றி பின்னாலே நாம் பரிசீலிக்க முடியும்.

அரசு விவசாய பண்ணைகளில் பணிபுரியும் விவசாயத் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியம்.

*வினா எண். 532— திரு ர. கிருஷ்ணன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள அரசு விவசாயப் பண்ணைகளில் அரசின் ஆணைப்படி விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச சம்பளம் வழங்கப்படாமலிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆணை பிறப்பித்த நாளிலிருந்து பணியாற்றியவர்களுக்கு சம்பள பாக்கி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) தமிழ்நாட்டிலுள்ள அரசு விவசாயப் பண்ணைகளில் அரசின் ஆணைப்படி விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச சம்பளம் வழங்கப்பட்டு வருகிறது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

(ஆ) ஆணை பிறப்பித்த நாளிலிருந்து பணியாற்றியவர்களுக்கு சம்பள பாக்கி வழங்கும் பணி தொடர்ந்து நடந்து வருகிறது.

[முற்பகல் 9-50]

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்த விவசாயப் பண்ணைகளில் பணியாற்றக் கூடிய தொழிலாளர்கள் ஆங்காங்கு சங்கம் வைத்து கோரிக்கைகளை விட்டிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரும் அரசு நிர்ணயம் செய்த கூலியை வழங்க வேண்டும் என்று உத்தரவு இட்டிருக்கிறார்கள். அரசு உத்தரவிற்குப் பிறகும், மாவட்ட ஆட்சித் தலைவரின் உத்தரவிற்குப் பிறகும் கூட, சில இடங்களில் இந்தக் குறைந்தபட்சக் கூலியைக் கொடுப்பது இல்லை. உதாரணமாக கோவில்பட்டியில் இருக்கக்கூடிய லேபர் அசிஸ்டென்ட் என்னும் ஸ்கில்ட் தொழிலாளர்களுக்கு $3\frac{3}{4}$ ரூபாய் தினக் கூலியாக கொடுக்கிறார்கள். அவர்கள் 10, 15 ஆண்டுகளாக வேலை செய்பவர்கள். அதேபோல வடாற்காடு மாவட்டத்தில் செங்கம் பண்ணையிலும் இப்படி போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட இடங்களை கொஞ்சம் கூர்ந்து கவனித்து, அவர்களுக்கு குறைந்தபட்சக் கூலியை அரசு நிர்ணயம் செய்தபடி கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் மத்திய அரசின் பண்ணை. நம்முடைய மாநில அரசின்கீழ் இருக்கக்கூடிய பண்ணைகளில் குறைந்தபட்சக் கூலி, அரசு நிர்ணயித்துள்ளவாறு வழங்கப் பெற வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இது வரையில் அப்படி வழங்கப்பெறாமல் இருந்தால், இந்த ஆணை பிறப்பிக்கப்பெற்ற தேதியிலிருந்து அவர்களுக்கு சம்பள பாக்கியையும் வழங்க ஆணையிடப்பட்டிருக்கிறது.

திரு ர. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, அவர்களுக்கு சம்பளம் வழங்குவது மாத்திரம் அல்ல, அவர்கள் அங்கே 10,15 ஆண்டுகளாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை நிரந்தரமாக்கவும் அரசு முன் வந்து ஏற்பாடு செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அதை தனியாகத்தான் பரிசீலிக்க வேண்டும்.

திரு ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அக்ரிகல்சர் டிபார்ட்மெண்டைச் சேர்ந்த அரசு பண்ணைகளில்,

1981 மார்ச் 28]

பேச்சுப் பாறையில் இருக்கும் அன்னாசி பண்ணையிலே வேலை செய்யக்கூடிய விவசாயத் தொழிலாளர்களுக்கு காலா காலத்தில் சம்பளம் கொடுக்கப் பெறுவது இல்லை என்பது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பெற்றதா? அப்படி இல்லையென்றாலும் கூட, இனிமேலாவது அவர்களுக்கு காலாகாலத்தில் சம்பளம் கொடுக்க ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கா. காளிமுத்து தலைவர் அவர்களே, அதைப்பற்றி இதுவரை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பெறவில்லை. உறுப்பினர் அவர்களின் வேண்டுகோள் மீது விசாரித்து அரசு அதைப்பற்றி நடவடிக்கை எடுக்கும்.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயப் பல்கலைக் கழகம் ஒன்று என்னுடைய தொகுதியில் இருக்கிறது. அது தமிழகத்தில் இருக்கக்கூடிய மிகப் பெரிய பல்கலைக் கழகங்களில் ஒன்றாக இருக்கிறது. அது ஒரு தனி சாம்ராஜ்யம் போல் தனி சிற்றரசு போல் நடந்து கொண்டு வருகிறது. அங்கு வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு கொடுக்க வேண்டிய கூலிகளை ஒழுங்காகக் கொடுக்காமல் அவர்கள் அங்கே போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவசாயப் பண்ணைகளைப்பற்றி கேள்வி, நீங்கள் சொல்வது விவசாயப் பல்கலைக் கழகம் சம்பந்தமாக........................

திரு. கோவைத்தம்பி : தலைவர் அவர்களே, அந்தப் பல்கலைக் கழகத்திலேயே, பண்ணைகளும் இருக்கின்றன. அந்தப் பண்ணைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு, அவர்கள் பல ஆண்டுகளாக வேலை செய்தும் கூட, அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்சக் கூலியை அவர்கள் இன்னும் பெறாமல் இருக்கிறார்கள். அந்தப் பல்கலைக்கழகம் ஒரு சிற்றரசு போல் தன் இஷ்டமாக நடந்துக் கொள்கிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் அதை பரிசீலித்து அவர்கள் மேல் நடவடிக்கை எடுத்தோ, அல்லது சட்டத்திலே அதற்கான திருத்தம் கொண்டு வந்தோ, அந்த தொழிலாளர்களுக்கு உதவி செய்ய முன் வருவார்களா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போன்ற புகார்கள் எதுவும் அரசிற்கு வரவில்லை. தகவல் அறிந்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு ஜில்லாவில், மிராளூர் என்ற இடத்தில் அரசு விவசாயப் பண்ணை ஒன்று இருக்கிறது. அந்தப் பண்ணையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு, அரசு உத்தரவிட்டும் கூட, குறைந்தபட்சக் கூலி, நிர்ணயம் செய்யப்பெற்றவாறு கொடுக்கப்பெறுவது இல்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்ததா? அப்படி இருந்தால் என்ன நடவடிக்கையை அரசு எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய தைப்பேன்ற நிலை அரசு ஆணை பிறப்பிக்கப்பெறுவதற்கு முன்பு இருந்தது. மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து பண்ணைகளுக்கு தகவல் வருவதற்கு காலதாமதம் ஆகிய காரணத்தினால் அப்படி கொடுக்கப்பெறாமல் இருந்தது. இப்போது அப்படிப்பட்ட புகார்கள் நிறைய வந்ததின்பேரில் உடனடியாக குறைந்தபட்சக் கூலியை அவர்களுக்கு கொடுக்கப் பெறவேண்டும் என்று எல்ல விவசாயப் பண்ணைகளுக்கும் ஆணை அனுப்பப்பெற்றிருக்கிறது. அப்படி இதுவரையில் கொடுக்காமல் இருந்தால், ஆணை வழங்கப் பெற்ற தேதியிலிருந்து அந்த பாக்கியையும் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவகளே, விவசாயப் பண்ணையில் வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் என்று நிர்ணயம் செய்யப்பட்டது எல்லா மாவட்டங்களிலும் ஒரே மாதிரியாகவா அல்லது மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபட்டிருக்கிறத ? எந்த வ்தத்தில் என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திற்கும், மற்றைய மாவட்டங்களுக்கும் வேறுபாடு இருக்கிறது.

போடியிலுள்ள மண்வளப் பாதுகாப்பு அலுவலகம்.

*வினா எண் 533—திரு கே. எம். எஸ். சுப்பிரமணியன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

போடியில் இருக்கும் மண்வளப் பாதுகாப்பு அலுவலகத்தை இராமநாதபுரத்திற்கு மாற்றுவதற்கு திட்டம் ஏதும் அரசு செயற்குறிப்பில் இருக்கிறதா?